
# 31ம் நாள் அஞ்சலி



கிளிநொச்சி பூநகரி மட்டுவில் நாட்டைப் பிறப்பிடமாகவும்
பிரான்ஸ் செவ்றோனை வசிப்பிடமாவும் கொண்ட

அமரர் **தில்லையம்பலம் கதிரவேலு** (குழந்தைவேலு)

அவர்களின்

சிவபதம் குறித்த

# 31ம் நாள் நினைவு மலர்

## 28.07.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பிரான்ஸ்சில் வசித்துவந்தவருமாகிய
அமரர் தில்லையம்பலம் கதிரவேலு அவர்களின்
சிவபதப்பேறு குறித்த நினைவுமலர்

29.07.2016



**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்' – குறள்**

கிளிநொச்சி பூநகரி மட்டுவில் நாட்டைப் பிறப்பிடமாகவும்
பிரான்ஸ் செவ்றோனை வசிப்பிடமாவும் கொண்ட

அமரர் **தில்லையம்பலம் கதிரவேலு** (குளந்தைவேலு)

அவர்களின்

சிவபதம் குறித்த

# 31ம் நாள் நினைவு மலர்

## 28.07.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தில்
முத்தாய்

1942 - 02 - 12

பன்னாட்டில்
வித்தாய்

2016 - 06 - 29

## அமரர்

# தில்லையம்பலம்–கதிரவேலு

**அவர்களின் திதி வெண்பா**

துர்முகி ஆண்டதனில் ஆனித்திங்களிலே
தோற்றிய அமரபக்க நவமித்திதிதனிலே
பெருமகன் தில்லையம்பலம் கதிரவேலு
அவர்களும் இறைவன்தாழ் கலந்தனவே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கா எம் கண்கண்ட
தெய்வமாய் வழமை போல் இம்முறையும்
நலமாக வருவீர்கள் என்று நாமெல்லாம் காத்திருக்க,
உமையெல்லாம் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்தீரோ
உங்கள் பிரிவுத்துயர் கேட்டு பூநகரி பொலிவிழந்து போனது.
வாடியடி வாடி நின்றது. உங்கள் பாதம் பட்ட
நெற்புலவு வீதி நெஞ்சுருகி கிடக்கிறது.
திருநீறு அணிந்த அந்த திருமுகத்தை யாம் எங்குபார்ப்போம்.
ஏங்குது ஐயா எம்மனம்.
நீங்கள் கோபப்பட்டு யாரும் பார்த்ததில்லை.
உங்களுக்கு எதிரிகள் என்று எவரும் இல்லை.
உம்மைபோல் பிறரை நேசி என்ற வாசகத்தை
நாம் வாசிப்பது மட்டும் தான்.
ஆனால் உங்கள் வாழ்க்கையே அதுவல்லவா.
ஈழத்தின் இறுதியுத்தம் நடந்து போது
நீங்கள் இருந்தது இந்தியாவில்
தொடர்ந்து அங்கு இருக்க உங்கள் மனம் இணங்கவில்லை.
குஞ்சுகளுக்கு இரைகொண்டு வரும் பறவைபோல்
எங்கள் கூடு தேடி பறந்து வந்தீர்கள் ஐயா.
முட்கம்பி வேலிகளுக்குள் நாம் முடங்கி நின்ற நிலை கண்டு
கண்கலங்கி நின்றீர்கள். இப்போது நினைக்கயிலும்
எம்கண்கள் குளமாகின்றன.
உங்கள் பிரிவை தாங்கமுடியாமல் தவிக்கிறோம்.
தேற்றுவார் யாருமின்றி தேம்புகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.
ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைசொல் மிக்க மந்திரமில்லை
அறிவின் உருவமாய்
சோராத உடலும் துணிந்த மனமும்
பொறுமையும் புன்சிரிப்பும் பூண்டு
பாசமும் பண்பும் நெஞ்செங்கும் பரந்து
துய மனதுடன் உறவுக்கும் உயிருக்கும் தோழனாய்
கடும் உழைப்பால் எமைக்காத்து
இன்முகத்துடன் நல்வழிகாட்டி
எங்களை வையத்துள் வாழவைத்து
எமக்கு ஆலமரமாய் இருந்த
எங்களின் அன்புத்தெய்வத்திற்கு
எங்களின் கண்ணீர் பூக்களை சமர்ப்பிக்கின்றோம்.
என்றும் அவரின் நினைவுகளை
மனதில் துமந்தபடி அவரின்
பாதங்களில் இம்மலரை சமர்ப்பிக்கின்றோம்.
சமர்ப்பணம்.சமர்ப்பணம்.சமர்ப்பணம்.
இவரின் ஆத்மா சாந்திக்காக வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி.... ஓம் சாந்தி... ஓம் சாந்தி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து மண்ணின் மைந்தன்

அமரர் தில்லையம்பலம் -அமரவேலு அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழத்துதேசமாம் வடபால் அமையப்பெற்ற கிளிநொச்சி பூநகரி எனும் பிரதேசம் பரந்துபட்ட தேசமாகவும் நாச்சிக்குடா, வலைப்பாடு, பள்ளிக்குடா, சரித்திரம் படைத்த ஈழத்து துறைமுகமாம் நாகதேவன் துறை இப்படியாக பல துறை இறங்குதுறை முகங்களையும் தன்னகத்தே அமையப்பட்டதுன் மும்முனைகளும் கடலினால் சூழப்பட்ட பல்வகையான கிராமங்களை உள்ளடக்கி நெல், பனை, தென்னை, பல்வகை பழங்கள் காய்கறி தோட்டங்கள். கறுப்பன் நெல் மொட்டைக்கறுப்பன் நெல்,மொறுங்கன் நெல் இப்படி விவசாயத்தை முன்னீடாகவும். பனைவழங்களையும் கெண்டவர்கள் பூநகரி மக்கள். பூநகரியில் அமையப்பெற்ற சிறு கிராமமே தான் மட்டுவில் நாடு மேற்கு வில்லடியில் வாழ்ந்து வந்த பெருமகானாம் தில்லையம்பலம்-கனகம்மா தம்பதியினரின் இன்ப ஊற்றால் உருவாகி குடும்பத்தின் மூத்த மகனாகவும். இரண்டாவது பிள்ளையாகவும். இந்த புண்ணியபூமியில் 1942.02.12 ம் திகதியில் உதித்தவர் தான் தில்லையம்பலம்-கதிரவேலு குடும்பத்தின் இரண்டாவது பிள்ளை என்றபடியால் இவரை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார்கள். இவர் மழலை பருவத்தில் அதிக குறும்புத்தனமான வேலைகளை செய்து பெற்றோர்களை கோபத்துக்கும் உள்ளாக்குவார். அத்துடன் சிரிப்புக்கும் உள்ளாக்குவார். ஓரளவு விபரம் தெரியும் வரை இவருடன் பெற்றோர் பெரும் பாடு பட்டதாக சொல்வார்களாம். பள்ளிபருவம் ஆனதும் அருகில் உள்ள மட்டுவில்நாடு மேற்கு வில்லடியில் அமைந்த கிளி.மட்டுவில்நாடு அ.த.க.பாடசாலையில் முதலாம் வகுப்பில் பெற்றோர்கள் இணைத்து விட்டனர்கள். அங்கே தனது கல்வியில் அமர்ந்தவர்5ம் வகுப்புக்கு வரும் முன்னமே பாடசாலையில் படிப்புத்திறனால் பெயர் பெற்ற இவர் குழப்படி குறும்புத்தனத்தாலும் ஆசிரியர்கள் பெற்றோரிடம் முறையிட்டனர். இவ்வாறாக மட்டுவில் நாட்டில் 05ம் வகுப்பு வரை கல்வி கற்றவர் மேற்படிப்புக்காக பூநகரி வாடியடி "யூனியேஸ் ஸ்கூல்" எனும் பாடசாலையில் 08ம் வகுப்பு வரை கல்விகற்றவர். பாடசாலைக்காலத்தில் படிப்பாலும் விளையாட்டாலும். முன்னிடம் வகித்து வந்தவர். இவரின் குடும்ப நிலை வறுமை காரணமாக படிப்பினை தொடர முடியாது. பாடசாலை செல்வதை நிறுத்திக்கொண்டார். பின்னர் குடும்பத்தின் தலைமகனாக பிறந்ததினால் தந்தைக்கு உதவியாக விவசாயத்திலும் தோட்டங்கள் ஆடுமாடுகள் இப்படியாக பல துறைகளிலும் தந்தைக்கு உதவியாக இருந்து ஒவ்வொரு தொழிலையும் தான் தனித்துச்செய்து பாடுபட்டு பயன் பெறும் நிலைக்கு தன்னை வளர்த்துக்கொண்டார். இப்படியாக காலம் கடந்து பருவ வயதினை எட்டியதும். தன்னுடைய நண்பர்கள் உறவினருடன் நாடகங்கள் நடிப்பதிலும், மேடை யேற்றுவதிலும் தன்னை ஈடுபடுத்தி கலைத்துறையிலும் நற்பெயர் பெற்ற கலைஞன் கலைத்துறை ஈடுபாட்டுடன் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைப்பயணத்துக்காக தோழியை மனதில் நிச்சயித்துவிட்டு தனது விருப்பத்தினை பெற்றோரிடம் கூறினார் உறவாகவும் அயல் வீடாகவும் பழகி வந்தபடியால் பெற்றோர்களும் மகனின் விருப்பத்தினைதட்டாது. பெண்ணின் பெற்றோர்களான விஜயரட்ணம்-தர்மலிங்கம் இராசம்மா தம்பதியினருடன் தங்கள் குடும்ப சம்பாசனைபற்றி பேசி தில்லையம்பலம் - கதிரவேலுமேல் அவர்களும் விருப்பங்கொண்டு திருமணத்துக்கு ஆயத்தம் செய்து 1962.07.05 அன்று தில்லையம்பலம் கதிரவேலுவிற்கும் தர்மலிங்கம் மங்கையக்கரசிக்கும் திருமணம் நடந்தேறியது. இதன் பின் அன்பின் வெளிப்பீடாக அன்னியயொன்னியமாக பாசப்பிணைப்புடன் தனிக்குடித்தனம் நடத்தி நாளாந்த தொழிலை கருத்தில் கொண்டுபல்பொருள் அங்காடி நடாத்தி வந்தார் மக்களுடன் பழகுவதற்கும் மக்களை அன்பு ஆதரவு பணிவாக பேச்சு அரவணைப்பு எல்லாமே இவரிடத்தில் இருந்தமையால் மக்கள் இவர் பக்கம் ஈர்க்கப்பட்டு நன்மதிப்பு மரியாதையுடன் இவரின் குடும்பம். உயர் நிலைக்கு எட்டினார்கள். முதலாழி என்ற மதிப்பு மிக்க பெற்றதுடன் கதிரவேலு குழந்தைவேலு- முதலாழி மும்மொழிப்பெயருடன் பெருமையுடன் குடும்பம் நடாத்தி வரும் நிலையில் இவரின் அன்பின் வெளியீடாக மழலைச்செல்வங்களும் இவர்களிடையே வந்தன.முருகன் சொத்தாய் - சரவணபவனும் பசுமையுடையோனாய் நடேஸ்வரனும். புதுமையுடையோளாய் ஜெயசக்தியும். சிங்கரதமாய்- சிவகுமாரும். சிந்தனையுடையோனாய் சிவசக்தியும் காருண்யக்காரியாய்-ஜெயகௌரி. பல்கலை ரசனையுடையாள்-ஜெயலலிதா. கலகலப்புடையாள் கேமகலாவும். சிந்தனையாளனாய் றஞ்சித்குமாரும். என ஒன்பது செல்வங்களையும் முத்தாக எங்கள் சொத்தாக ஏற்றுக்கொண்ட பெருமகன் உறவினர் நண்பர்களுடன் சேர்ந்து பல தொழில்களும் கற்றறிய வேண்டும் என்றமையாலும் நண்பர்களுடன் சேர்ந்து பொழுது போக்கு சித்திரங்களிலும் ஆர்வங்கொண்டு தன் குடும்பத்திற்காக பிள்ளைகளுக்காக அயராது உழைத்து வந்தார். நசுகாமை சிரிக்காமை பகிடிக்கதைகள் சொல்லி அடுத்தவர்களை சிரிக்கவைப்பதிலும் கெட்டியானவர். ஆலய வழிபாடுகளிலும் மிக நம்பிக்கை உடையவர் இவரின் இணைபிரியா அன்பினாலும். உறவாலும் அனைத்து துன்பத்திலும் நீந்திக்கரையேறி வாழ வளிசமைத்தது இருவரின் இணைபிரியா அன்பாகும். ஒரு நாளேனும் கணவன் மனைவி பிரிந்து சண்டை பிடித்தது தெரியாது. பிரிந்ததும் நாமறியோம். இவரின் அன்பான உறவுகள் என்ன நிகழ்வுகள் செய்தாலும் இவரை முன்னிடமாக அழைப்பர். ஏன் என்றால் இவரிடம் கதைகேட்பதற்காகவோ இவருடன் வேலை செய்பவர்களுக்கு பசியும் தெரியாது நேரம் போவதும் தெரியாது வேலை ஓடிக்கொண்டு இருக்கும் என்பதற்காக அவ்வளவு நகைச்சுவையாக கதைகள் சொல்வதிலும் சிரிக்கவைப்பதிலும் மாண்பு மிகு வீரர் இது வரை இவர் யாருடனும் சண்டை சச்சரவுகளில் போனது தெரியாது யாருடனும் கோபமாக இருந்தார் என்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமறியோம். வீட்டுக்கு நல்ல வழை என்பது போல இவருக்கு கிடைத்த துணைவியாரும் அன்பு பண்பு பாசமாகவும் கணவரின் மேல் கருணையுடனும். நடந்து கொண்டார்கள். பிள்ளைககளையும் தூக்கி நால்வர் திருமணம் முடித்து மருமக்களையும் கண்டார்.மூன்று மகன்கள் 90 ஆண்டு காலப்பகுதியில் வெளிநாடு சென்றார்கள் 1991காலப்பகுதி பூநகரியை இராணுவம் பிடித்தது இடம் பெயர்வு வந்து நெற்புலவில் இருந்து ஜெயபுரம் பல்லவராயன்கட்டுக்கு ஏதிலிகளாக மனைவி பிள்ளைகளுடன் சென்றவர். நாளாந்தம் உணவுக்கேனும் உழைக்க வேண்டும் என்ற நோக்குடன் சிறிய கடைபோட்டு நடத்தி வரும் நிலையில் இவரது மகன்மார் இந்தியா வரும்படி அழைத்தார்கள். மருமக்கள் பிள்ளைகள் தனது பிள்ளைகள் மனைவி குடும்பமாகவே. இந்தியா சென்று சில ஆண்டுகள் அங்கு நின்று கோவில் குளங்கள் எல்லாம் தரிசனம் செய்து வந்தார்கள் இடம் பெயர்வுடன் எஞ்சிய பிள்ளைகளுக்கும் திருமணம் முடித்து கொடுத்தார்.பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகளையும் கண்டார் கடைசி மகனுக்கும் நிச்சயம் செய்தபடி உள்ளது. புலம் பெயர்வுடன் உணவு சீர்கேடுகளால் நோய்தாக்கத்திற்கு உள்ளானார் மருந்தும் கையுமாக இருந்தாலும் ஓரளவு நடமாடி வந்தார். மூத்த மகன் கைதவறியதோடு மனைவி வெளிநாட்டிலும் கணவர் ஈழத்தில் மகளுடனும் சிறிது காலம் பிரிந்து இருந்தார்கள் கோபமாக பிரிந்திராமல் காலத்தின் கட்டளையால் பிரிந்து வாழ்ந்தார் இதற்குள் குல தெய்வமான வீரபத்திரர் ஆலயம் கட்டவேண்டும் என்ற நீண்ட நாள் கனவுடன் இருந்தார் தனது கனவை பிள்ளைகளிடம் கூறி தந்தையின் சொல்லை தட்டாத பிள்ளைகள் எல்லாம் சேர்ந்து நிதியுதவி வழங்கினார்கள். அவர் தனது கனவின் படி ஆலயம் கட்டி கும்பாவிசேகம் செய்து முடிந்ததும் அப்பா அம்மா இருவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று ஆசையுடன் அப்பாவை வரழைத்தனர் ஈழத்து வாழ் பிள்ளைகளுடன் உறவுகளுடன் அன்பான ஆசி வேண்டி வெளிநாடு சென்று துணைவியாரின் முகம் பார்த்து மகிழ்ந்த புண்ணிய சீலன் இரண்டு மூன்று ஆண்டுகள் வெளிநாட்டு வாழ்க்கை. வாழ்ந்து விட்டு வெளிநாட்டு பிள்ளைகள் உறவுகள் ஈழத்து பிள்ளைகள் உறவுகள் எல்லோரையும் துயரில் மூழ்க விட்டு மனைவி பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அனைவரையும் ஆழ்ந்த துயரில் ஆழ்த்தி விட்டு மூத்த மகனுடன் வாழ்வதற்காக கதிரவேலு எனும் பெரும் மகன் 29.06.2016 அன்று இவ்வுலகை விட்டு விண்ணுலகம் சென்று இறையடி சேர்ந்துள்ளார் புண்ணியவானின் ஆத்மா

சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக.............!

ஓம் சாந்தி.......ஓம் சாந்தி.........ஓம் சாந்தி..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்மணியாம் கதிரவனின்
## துணைவியாரின் குரல்

மாலையிட்ட மன்னவனோ என்னாசை அத்தானே...
உமைக் கரம்பிடித்த நாள் தொடக்கம் நாம்
பிரிந்திரிந்த நாளறியேன் எத்துயர் வந்தபோதும் என்னவர்
சினந்தொரு வார்த்தை சொன்னதை நானறியேன்..
எத்துயரில் நான் இருந்தாலும் மன்னவரே நீர் வந்தால்
சிரிப்பு கதைகூறியே என் மனசை ஆற்றிடுவீர்.
என் பொற்சேவல் போன இடமறியாமலே
பெண்குயிலும் கதறும் சத்தம் காதில் கேக்கலையோ
நாடு விட்டு தேசம் விட்டு போனாலும்
என்னை தேடியெல்லோ காலடியில் ஓடிவந்தீர்
முற்றத்து மல்லிகை பந்தல் அருகே
நாங்கள் மணக்கோலம் கொண்டோமய்யா
இப்போ மல்லிகைப்பூச்சொரிந்தோ மன்னவனை
வழியனுப்பும் விதியாச்சோ ஐயா?
ஆலமரம் போல விழுதெறிந்து எங்கள்
இல்லமெல்லாம் நிழல் தந்த சூரியனே
பொட்டிளந்து பூவிழந்தோ என்னை
பொன்னாடை கட்டென்று காதவழி சொன்னீரோ
உமது கலகலப்பை பொறுத்திடாமல்
காலனவன் உமது உயிர்ப்பூவைப் பறித்தானோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஐயா....
மலர் அள்ளி சொரிகின்றோம் ஐயா....
ஓம் சாந்தி...... ஓம் சாந்தி........ஓம் சாந்தி........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சரவணபவான் அவர்களின் மனைவி
## திருமதி. தயாழினி (தயா) குரல் விம்பம்

குடும்பத்தின் விளக்காய் நின்று முதல் முத்தாய் மகனை பெற்று எனக்கு கணவராய் அமைந்த ஆசை மாமாவே மனம் நெகிழ்ந்துபோய்விட்டது உங்கள் பிரிவு முதல் மருமகளாய் நான் புகுந்த வீடு வந்த வேளை அணைத்து நின்று அன்பு காட்டி பெற்ற பிள்ளை போல் பார்த்த என் அருமை மாமாவே ஒருகதை சொல்லாது எங்குதான் சென்றீர்களோ உங்கள் முதல் முத்தை இழந்த சோகம் என் நெஞ்சசைவிட்டு அகலவில்லை அடுத்து ஒரு ஆறா துயரில் ஆழ்த்திவிட்டு சென்றீர்களே மாமா தெய்வங்கள் எனக்கென்று நான் தேடியது இல்லை உன் கண்கண்ட முதல் தெய்வம் என் அன்பு மாமா என் முகம் ஒரு தரம் பார்கைகவரமாட்டீர்களோ...

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி...... ஓம் சாந்தி........ஓம் சாந்தி........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகன்-நடேஸ்வரன் லண்டன் ஈசன்**
**குரல் விம்பம்**

தோழ்மீது எமைச்சுமந்து
மார்போடு அணைத்து தாலாட்டி
என்னை உறங்க செய்யும்
என்னாசை அப்பாவே எங்களைவிட்டு எங்கே போனீர்கள்
என் தெய்வத்துடன் ஒரு நொடியேனும் தாங்கி நின்று
பேசவேணுமென்றே ஓடிவந்தேன் என் ஆசை அப்பாவே
எங்களுடன் பேசவேண்டாமென்றோ உங்களையும்
கண்ணிலாக்காலனும் உங்களை சடுதியாய்
வாவென அழைத்தானோ ஆசை அப்பாவே
உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி......ஓம் சாந்தி......ஓம் சாந்தி......

**மகள் - சிவானந்தம் ஜெயசக்தி ஜெயா கச்சாய்**
**குரல் விம்பம்**

நான் முன் கண்ட தெய்வமே என் ஆசை அப்பா
அமைதி.அன்பு.பாசம்.பண்பு இத்தனையும் நிறைந்த தெய்வமே
உங்களைபோலொரு தெய்வத்தைஇனி எங்கு காண்போம்
காற்ரோரம் வந்த உங்கள் செய்தி கேட்டு
உங்கள் மகள் இறுதிக்கடன் செய்திட கொடுத்து
வைக்காதப் பாவியானேனப்பா இனி உங்களை நான்
எங்கு காண்பேனப்பா உங்கள் ஆத்மா சாந்தி பெற
பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி......ஓம் சாந்தி........ஓம் சாந்தி......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகன் - சிவகுமார் (சிவா) லண்டன்**

**குரல் விம்பம்**

பாலகரை அன்பெனும் பாலூட்டி வழுத்த தெய்வமே
எங்களை விட்டு எங்கப்பா ஓடி ஒழிந்தீர்கள்
எங்களில் முதல் தீபம் அணைந்த துயர் ஆறமுன்
எங்கள் குடும்பத் தலைத்தீபமும் அணைந்ததே அப்பா
ஒரு வேளையேனும் பட்டிணி தெரியாது எங்களை
கலங்கவிடாது அயராது உழைத்து ஊனத்தை
உணவாக்கி எமக்கெல்லாம் உணவூட்டிய அப்பா
உங்களை ஊர்வலமாக கொண்டு செல்ல விதியாச்சோ
என் ஆசை அப்பாவின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி......ஓம் சாந்தி.......ஓம் சாந்தி

**மகள் - குமரேஸ் சிவசக்தி (சத்தியா)வட்டக்கச்சி**

**குரல் விம்பம்**

அன்பின் பொக்கிசமே என் ஆசை அப்பா
சத்தியாவா கதைக்கிறாய் என்று என் அப்பா
கேட்டாலே என் மனத்துயரே ஆறிவிடும்.
எல்லோரையும் அணைத்து அன்பு மொழி பேசிய
அப்பாவின் அன்புக்கரம் ஓய்வு எடுத்ததோ அப்பா
ஒரு நொடியேனும் பிள்ளைகளை பிரிந்திராத
நீங்கள் எங்களை மறந்து எங்கே போனீர்கள் அப்பா
கண்ணிமைக்கும் பொழுதில் காலனும் காவு கொண்டானோ
உங்கள் ஆத்ம சாந்தி பெற பிரார்த்திப்போமாக.....
ஓம் சாந்தி..... ஓம் சாந்தி.......ஓம் சாந்தி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகள் - சதீஸ்- ஜெயகௌரி(கௌரி)லண்டன்**

**குரல் விம்பம்**

அல்லி மலரெடுத்து அப்பாவை அரவணைத்து
முத்தமிட ஓடி வந்தேனப்பா
உங்கள் செல்ல மொழி கேட்டிடவோ
ஓடோடி வந்தேனப்பா ஓடோடி
வாய்க்கருசிபோடாப் பாவியானேனப்பா
பள்ளம் மேடு தெரியாமல் எமை தூக்கி வழர்த்த
எங்கள் அன்புத்தெய்வமே அப்பா பூஞ்செடிபோல்
எங்களுக்கு சோறூட்டி நீரூற்றி வளர்த்தீர்கள்
என்முகம் காணாது எங்கு ஒழிந்தீர் ஆசை அப்பாவே
வஞ்சகன் காலனும் வாவென்று அழைத்ததினால் எங்களை மறந்தீர்களோ
உங்கள் ஆத்ம சாந்திக்காய் அலரி மலரெடுத்து அள்ளி அள்ளி
பாதமதில் சொரிகிறேன் கண்திறந்து பாருங்க அப்பா
ஓம் சாந்தி......ஓம் சாந்தி........ஓம் சாந்தி.....

**மகள் - சுதன் ஜேயலலிதா (லலி)பிரான்ஸ்**

**குரல் விம்பம்**

அல்லிக்கொடி போல் ஆழ வேரூண்டி எங்களை
அரவணைத்த கரம் இன்று ஓய்ந்ததோ அப்பா
அன்பு பண்பு பாசம் அறிவு ஆற்றல் அத்தனைக்கும்
நீங்களே சொந்தக்காரனப்பா
எங்கள் அப்பாவுக்கோ 55வது திருமண நாளை கொண்டாடி
பொன்னாடை போட காத்திருந்தோம்
எங்கள் பொன்னாடை வேண்டாமென்றோ
எங்களை தவிக்கவிட்டு காலனும் போனீர்களோ
முல்லை மலரெடுத்து முத்தான அப்பாவிற்கு சொரிகிறேன்
உங்கள் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி......ஓம் சாந்தி........ஓம் சாந்தி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகள்-பிறேம்-கேமகலா (கலா)பிரான்ஸ்**

**குரல் விம்பம்**

தேன் கூடோ வீழ்ந்ததினால் இருப்பிடமின்றி
தேனிகளோ சோக கீதம் பாடிப்பறக்குதப்பா
எங்கள் இல்லத்தில் ஒளி தந்த பெரும் தீபமோ
அணைந்ததினால் இல்லமோ இருளில் மூள்குதப்பா
கள்ளம் கபடம் இல்லா வெள்ளை உள்ள மனதை
இனி எப்பிறப்பில் நாம் காண்போம் அப்பா
பட்ட மரம் ஆனாலும் துளிர் விடச்செய்வோமே
எனக்காத்திருக்க கடுகதியாய் காலனும் வந்தானோ அப்பா
உங்கள் ஆத்மா சாந்தி பெற தேமாப்பூவினால் சொரிகின்றோம்
ஓம் சாந்தி.....ஓம் சாந்தி........ஓம் சாந்தி......

**மகன் - றஞ்சித்குமார்(செல்லா)பிரான்ஸ்**

**குரல் விம்பம்**

ஆலமரத்தின் விழுதுகளில் ஒன்றல்லோ நான் என்
அலங்கார வாழ்நாளைக்காணாது சென்றதேனோ அப்பா
நாம் சின்னம்சிறு துளிர்களாய் இருக்கையிலே
எம்மை ஆளாக்க அரவணைத்துச்சென்றகரமோ
இன்று ஓய்வெடுத்து கிடப்பதேன் ஆசையப்பாவே
என்தாயோ பொட்டோடும் பூவோடும் இருப்பதைப்
பொறுக்காத காலனவன் தாலிதனை களவாடிச்சென்றதேனோ
என் தெய்வங்கள் பட்ட துன்பத்திற்கு ஓய்வு கொடுத்து
இறுதிநேர வாழ்வை புதுப்பொலிவோடு வாளட்டும் என்று
உங்கள் ஆசைமகன் பாத்திருக்க என்னை பரிதவிக்க
விட்டுச்சென்ற என் ஆசையப்பாவே உங்கள் ஆத்மா சாந்தி பெற
மகிழம் பூவெடுத்து மனதார சொரிகின்றேன்
ஓம் சாந்தி.......ஓம் சாந்தி......ஓம் சாந்தி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து உடன்பிறப்பு தம்பிமார்

## குரல் விம்பங்கள்

தந்தைக்கு தலைமகனாய் வந்த
சூரியதேவனே எங்களின் இதயங்களில்
குடிகொண்டிருந்த அன்பு பொக்கிசமே
எங்களின் ஆருயிர் அண்ணா
எங்களுக்கு ஒளியூட்டிய அறிவூட்டிய
கதிரவன் எங்களை இருளில் மூள்கவிட்டு
நொடிப்பொழுதில் மறைவான் என்று
கனவிலும் தோற்றவில்லையே அண்ணா
காற்றிலே வந்த உங்கள் செய்தி
எங்கள் காதோரம் எட்டியதும் இது
நிஜமோ பொய்யோ என்று புலம்பினோம்
எங்கள் அங்கங்களோ ஒரு நொடி அசையமறுத்தது அண்ணா
தந்தையும் போயினர் தாயரும் போயினர்
இனி எங்கள் வழிகாட்டி யார் உளரோ
அடக்கம் ஒடுக்கம் அன்பு பண்பு ஆதரவு
ஐம்பொருளின் பொக்கிசமே எங்கள் அண்ணா
பேரும் புகழுமாய் வாழ்ந்த எங்கள் தெய்வமே
இறுதி வேளை உங்கள் திருப்பாதமதில்
மலர்கள் சொரிந்து வணங்க முடியாத
பாவிகளானோம் அண்ணா..அண்ணா...
நீங்கள் போன இடத்தை தேடி நாமும் வருவோம்
கலங்காது இருங்கள் அன்பு தெய்வமே அண்ணா
உங்கள் ஆத்ம சாந்தியடைய கூடி நின்று பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி.......ஓம் சாந்தி.......ஓம் சாந்தி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத்து உடன் பிறப்புக்கள் அக்கா தங்கை**

**குரல் விம்பங்கள்**

தாமரை செல்வனே தம்பி கதிரவா
படுமரமாய் நானிருக்க பாவியே
என்னை விட்டுப்போனாயோ தம்பி கதிரவா
செந்தாமரை மலரெடுத்து தேசம் விட்டு போனாயோ
அக்காமுகம் காணாது அன்னிய தேசம் போனாயோ
உனக்கு வாய்க்கருசி போடா பாவியானேனோ
பவளக்கொடியே என் தம்பி உன் ஆத்மா சாந்தி பெறுக.
முன் வந்த முத்தோ முழுநிலவோ மூவேந்தர்
சொல்லளகோ என் ஆசை அண்ணாவே
வெளிநாடு போவதாக சொன்னீரே என் ஆசை அண்ணாவே
இவ்வுலகை விட்டு போகும் செய்தி சொல்ல
ஏன் மறந்தாயோ என் அன்புத்தெய்வமே அண்ணா
கோடிசனமிருந்தும் கோமகனே உன்
முகம் காணாப்பாவியானேனோ அண்ணா
தில்லைக்கொடியில் பூத்த மலரே
வாடி விழ முன் உயிர்பூவாய் கொய்தானோ
வஞ்சனை நெஞ்சுடையான் காலனும்
உங்கள் ஆத்ம சாந்தியடைய மலரிட்டு
பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி......ஓம் சாந்தி.........ஓம் சாந்தி.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன்மார், மருமகளிமார்
## ஈழத்து பிரான்ஸ் லண்டன், ஜெர்மனி, சுவிஸ், இந்தியா
## குரல் விம்பங்கள்

வாழ்க்கைச் சங்கரத்தில் மாறி மாறி வரும்
இன்ப துன்பங்களையெல்லாம் நாம் தாண்டும் போது
மாமா நீங்கள்தானே முன்னுதாரணமாக நின்றீர்கள்
எங்கள் குடும்பம் சிறக்க வாழ்க்கையின் பல விடயங்களைசொல்லித்தந்த
ஆசானேவானம்பாடி வாழ்த்துச்சொல்ல வாழவந்தோமையா
உங்கள் வீட்டு மருமகளாக மருமகனாக
மக்களாக எம்மை பக்குவமாக பார்த்தீர்களே
கோவில் மணியோசையாய் உங்கள் மரணச்செய்தி
ஒலித்ததையா மருமக்கள் எம் மனமும்
வலித்ததையா நீங்கள் பிரிந்தாலும் உங்கள்
நினைவுகளோ பிரியாது அன்பு மாமா
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

## பெறாமக்கள் குரல் விம்பங்கள்

அன்பின் இருப்பிடமாய் அறிவின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
நேசத்தின் உறைவிடமாய் இருந்த எங்கள் பெரியப்பா அன்பற்று
அனாதியாய் நிற்கின்றோம் ஒரு குரல் பேசமாட்டீர்களோ ஆலமரமாய்
நீங்கள் நிற்க விழுதுகளாய் நாம் ருந்தோம் இன்று வேரறுந்த
விழுதுகளாய் வாடிக்கிடக்கின்றோம் பெரியப்பா
பெற்ற பிள்ளைகளை விட எமைத்தானே ஊட்டி வளர்த்தீர்கள்
உங்கள் மடிகண்ட எங்கள் இதயம் வெந்து வெடிக்கின்றது.
ஒருதடவை உங்கள் முகம் காட்ட மாட்டீர்களோ அன்புடன் பண்பும் சொல்லி
எமை பாசமாய் அழைத்து நின்று பாங்கான பகிடிக்கதை நவிலும்
உங்கள் பாசமுகம் இனி பார்ப்போமா...

உங்கள் ஆத்மா சாந்தியடை இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ... ஓம் சாந்தி ... ஓம் சாந்தி ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர் மைத்துனிமார்

(பிரான்ஸ் / ஜெர்மனி / சுவிஸ் / தாயகம்)

**குரல் விம்பங்கள்**

செல்லமொழி பேசும் அன்புத்தெய்வமே
எங்கள் ஆசை அத்தானே உங்கள்
பிரிவை கேட்டதும் எங்கள் மூச்சும்
ஒரு கணம் நின்றுவிட்டது அன்பு அத்தானே
காற்றோ வீச மறுக்கின்றது இப்படியாக
உங்கள் செய்தி கேட்டதும் நாம்
மட்டுமல்ல உலகே மௌனமானதே
அன்பு அத்தானின் ஆத்மா சாந்திபெற
பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி......ஓம் சாந்தி.......ஓம் சாந்தி

## பேரப்பிள்ளைகள்

**குரல் விம்பங்கள்**

**அன்புக்கரத்தினால் எமை அரவணைத்து**
முத்தமிட்ட தாத்தாவே எங்களை மறந்து
எங்குதான் போனீர்களோ அப்பப்பா என்றும்
அம்மப்பா என்றும் ஏலமிடுவது உங்கள்
காதினில் கேக்கலையோ உங்கள் பேரர்கள்
புளுவாய் துடித்து புரளுவதை கண்திறந்து பாராயோ
உங்கள் ஆத்ம சாந்தி பெற சின்னஞ்சிறு கரங்களினால்
மலரள்ளிச்சொரிகின்றோம் அப்பப்பா அம்மம்மா
ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூட்டப்பிள்ளைகள்**

**குரல் விம்பங்கள்**

பூட்டப்பிள்ளைகளாய் நாமிருக்க
எங்களை அணைத்த கரம் எங்கே
எங்களுடன் செல்ல மொழி பேசிய
பாட்டனார் எங்கே செல்லங்களை
விட்டு எங்கே தாத்தா போனீர்கள்
உங்கள் அன்ப மழலைகள் துடி துடிப்பதை
கண்திறந்து பாரீரோ தாத்தாவே
உங்கள் அன்பு எங்கள் இதயம் விட்டு
அகலாது தாத்தாவே ஆத்மா சாந்தி பெற
பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

**உற்றார் உறவினர்**

**குரல் விம்பங்கள்**

உன் சுற்றாடலில் எங்கு அவல குரல்
கேட்டாலும் ஓடி வந்து உதவிடுவாய்
எங்களுக்கு ஓர் ஊன்றுகோலாய்
நின் காரியம் முடிவுவரை நின்று
உதவியாய் தம்பி கதிரவேலுவே
நீர் செய்த கடனை உமது செயலை
வியக்கின்றோம் குழந்தை வேலு
முருகனைப்போல துன்பப்படும் இடங்களிலே
எல்லாம் உடன் காட்சி தருவாயடா
உன் இறப்பை எம்மால் ஏற்கமுடியவில்லை
உன் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி.....ஓம்சாந்தி......ஓம் சாந்தி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர் குரல் விம்பங்கள்

நண்பன் சினேகிதன் என்பதை புறந்தள்ளி
நண்பரையும் சோதரனாய் நினைத்து
எங்களுக்கு துன்பங்கள் தரும் வேளையில்
ஓடிவந்து சுமைதாங்கியாய் நின்று
தோளொடு தோள் தந்த நண்பனே
நீங்கள் எங்களுக்கு செய்த கடமைகளை
நாங்கள் உங்களுக்கு செய்யமுடியாப்
பாவியானோம் ஆருயிர் நண்பா
ஆயிரம் ஆயிரம் ஆயிரம் உறவுகள் நண்பர்கள்
இருந்தும் அன்னியதேசத்தில் உன்கறை
முடிந்தனவோ அன்பின் பொக்கிஷமே
என்றென்றும் உங்கள் நினைவோ
எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது நண்பா உங்கள்
ஆத்மா சாந்திபெற மலரினால் அர்ச்சிக்கின்றோம் நண்பா
ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

**அண்ணாவின் சில நொடிகள்**

என் சூரியன் மறைந்த செய்தி கேட்டதும் ஒரு கணம் என் இதயம் அசைய மறுத்தது அன்புத்தெய்வமே உங்கள் கனவில் தோற்ற வில்லையே அண்ணா சுப்ரா அண்ணையின் முகமே கனவில் காட்டியது விடிய எழுந்திருக்க உங்கள் செய்தி காற்றிலே பறந்து வந்தது அண்ணா. குஞ்சையா என்று குகலிக்கும் செல்ல மகனும் பவானும் பேரிடி தந்து கண்ணிமைக்கும் பொழுதில் மறைந்தாரோ சேனை உறவுகள் வேண்டாம் என்று என் மூத்த முத்தே வேண்டும் என்று என்னையும் மறந்து சென்றீர்கள். என்னுயிர் பிரியும் வரை உங்கள் நினைவே என் நெஞ்சைவிட்டு அகலாது ஆசை அண்ணாவே உங்கள் ஆத்மா சாந்தியடைய இம்மலரினை ஆக்கம் செய்து உங்கள் திருவடியில் வைத்து சமர்ப்பணம் செய்கின்றேன் அண்ணா......

ஓம் சமர்ப்பணம்....ஓம் சமர்ப்பணம்.....ஓம் சமர்ப்பணம்...

ஓம் சாந்தி.........ஓம் சாந்தி..........ஓம் சாந்தி.......

இங்ஙனம்
கடைசித்தம்பி
கருணாநிதி(நிதி)
நெற்புலவு
பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பஞ்சதோத்திரங்கள்**

திருச்சிற்றம்பலம்
விநாயகர் துதி
விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாய்
நன்மையினாற் கண்ணிற் பணியிற்கனிந்து

தேவாரம்
தந்தையார் போயினார் தாயரும்
போயினர் தாமும் போவார்
கொந்தவேற் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டுபோவர்
எந்தநாள் வாழ்வதற்கே மனம்
வைத்தியாலேழை நெஞ்சே
அந்தணாரூர் தொழுதுய்யலா
மையல் கொண்டஞ்சு நெஞ்சே

திருவாசகம்
தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாம் யார்? எமது ஆர்? பாசம் ஆர்?
சொன்னமாயம் இவை போக
கோமான் பண்டைத்தொண்டரும்
அவன் தன் குறிப்பே குறி கொண்டு
போம் ஆறு அமையின் பொய் நீக்கி
புயங்கள் ஆள்வான் பொன்னடிக்கே

**திருவிசைப்பா**
நீறணிபவளக்குன்றமே நின்ற
நெற்றிக்கண் உமையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணிசடையா அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியேம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப்பல்லாண்டு

மீண்டும் மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடி குடி
ஈசட்காட் செய்மின் குழாம் புகுந்து
அணடங்கடந்த பொருள் அளவி
லாதோர் ஆனந்தவெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள
பொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையின்றி மண்ணில் வளர்மணிக்கொழுந்தை
தேனக்க மலர்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் ஏழு பிறப்பைக் கண்களிப்பை கண்டார்கள்

### திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினைதீர்க்கும்முகம் ஒன்றே
குன்றுருவவேல் வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடி சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம் புணரவைத்தமுகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே

### புராணம்

மண்ணிற் பிறந்தார் பெரும் பணன் மதி சூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொரிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர் முன் வருகென உரைத்தார்

### வாழ்த்து

வான்முகில்வழாது பெய்க மரிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அரங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்

காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம் போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நிஷ்டையும் கைகூடும் - நிமலர்
அருள் கந்தர் சஷ்டி கசவசந் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

நூல்
நிலைமண்டில் ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்

பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்று வந்து

வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி

விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறன
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக

என்னை யாளும் இளையோன் கையில்
பன்னரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக

ஐயம் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயம்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்

சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலியாஞ் சிவ குகன் தினம்வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்

பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு தின்புயத் தழகிய மார்பில்

பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்பரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகன
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்

லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க

என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க

கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க

மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதொள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க

அழகுடன் முதகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க

நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க

பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக்ள இரண்டுழ் கருணைவேல் காக்க

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க

வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட

பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகைப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்

கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரசி காட்டோரி இத்துன்ப சேனையும்

எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்

என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தொடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்

பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்

ஓத மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதன் எனைக் கண்டால் கலங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு

கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக

சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக

விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்

கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி

பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக

ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாள் அரசரும் மகிழ்நதுற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே

திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்

கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முரகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுஞ்ம் செங்கல்வ ராயா

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முரகனைப்

பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி

உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்

பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனமகிழ்ந் தருளித்

தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகிர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்

ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்

மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழந்து ந்னமை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்

கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாக் காண மெய்யாய் விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்

நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்

சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குரபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி

எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி

உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு

விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தனே கௌிரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதே முடித்திடுவாய்
பண்ணும் வினையும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனுக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
உரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீரிவிரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நேபன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனைவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்திவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரெ குர்ப்புரளும் தேவியரேளள
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்நேற விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை அற்றவர்களுக்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூதணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குக் வீரசக்தி தாருமம்மா
வீரம் சிறப்பதற்குத் வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பாராசக்தி தாயவளே
எட்டுரடத் தேவியரே எல்லாமிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிள்குத் வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிடடால்
ஏசிலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனுக்குப் போட்டுவிட்டால் கல்மனது இறகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்குத் நல்லதெல்லாம் பெருவரும்
நாள்கள் கோள்களேல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சநடதனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப்பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மகதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களேல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துவங்கிவர
தேவிமகா காளியரே தெவழுடடாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்துகொள்ள...

- ஓடுள்ள ஒரே பாலூட்டி எது?

  **ஆமை.**
- பறக்கும் திறன் வாய்ந்த ஒரே பாலூட்டி எது?

  **வௌவால்.**
- கரப்பான் பூச்சியின் இரத்தம் எந்த நிறத்தில் இருக்கும்?

  **வெள்ளை.**
- கண்ணீர் புகை குண்டால் பாதிக் கப்படாத ஒரே மிருகம் எது?

  **குதிரை.**
- நாய்க்கு எத்தனை பற்கள்?

  **42.**
- முதலில் செயற்கை ஜீனைத் தயா ரித்தவர் யார்?

  **ஹர்கோபிந் கொரானா.**
- எக்ஸ்ரேவைக் கண்டுபிடித்தவர் யார்?

  **ரான்ட்ஜன்.**
- நோபல் பரிசி கொடுப்பதை ஏற்ப டுத்தியவர் யார்?

  **ஆல்ஃபிரட் நோபல்**
- சந்திரனில் முதலில் கால் வைத்த மனிதர் யார்?

  **நீல் ஆம்ஸ்ட்ராங்.**
- ரேடியத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

  **மேடம் கியூரி.**
- விண்வெளியில் இருப்பவர்க ளுக்கு வானம் எப்படித் தெரியும்?

  **கருப்பாகத் தெரியும்.**
- பிரைமரி கலர் என்றழைக்கப்படு பவை எவை?

  **சிவப்பு, பச்சை, நீலம்.**
- குறைந்த நேரம் மலரும் பூ எது?

  **பார்லி பூ.**
- இந்தியாவில் குங்குமப்பூ எங்கு அதிகம் விளைகிறது?

  **காஷ்மீர்.**
- மனிதனின் இதயம் சராசரியாக நிமிடத்திற்கு எத்தனை முறை துடிக்கிறது?

  **72 முறை.**
- சிவத்த இரத்த அணுக்கள் எங்கு உற்பத்தியாகின்றன?

  **எலும்பு மஜ்ஜையில்.**
- ஒட்டகச் சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன?

  **330.**
- நம் உடலில் தட்ப வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் பகுதியின் பெயர் என்ன?

  **ஹைபோதலமஸ்.**
- நம் உடலின் சிறிய எலும்பு எது?

  **ஸ்டேப்ஸ் (காது).**
- (மனித உடலில்) பிறந்ததற்குப் பின்பு வளர்ச்சியடையாத ஒரே பகுதி எது?

  **கருவிழிப் படலம்.**
- சராசரியாக மனிதனின் உடலில் எவ்வளவு எலும்புகள் உள்ளன?

  **206**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**'காலத்தால் செய்த நன்றி சிறது எனினும் ஞாலத்தில் மானப்பெரிது'**


எங்கள் குடும்பத்தின் தீபம் அணைந்திட்டபோது எம் அருகிலிருந்து உதவியோர்க்கும், அனுதாபசெய்திகளைத் தெரிவித்தோருக்கும், கண்ணீர் பிரசுரங்களை பகிர்ந்தோர்க்கும், ஈழும் மற்றும் இங்குள்ள நாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபச்செய்திகளை தெரிவித்தோருக்கும் தாங்காத துயரில் பங்கு கொண்டு ஆறதல் தந்தோருக்கும், இணையத்தளம் மூலம் கண்ணீர் அஞ்சலியை தெரிவித்தோருக்கும், உணவுகளை வழங்கியோருக்கும் ஈமைக்கிரிகைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவியோருக்கும் வீட்டுக்கிருத்திய கிரிகைகளை நடாத்திய குருமார்களுக்கும் அந்தியேட்டி சபிண்டீகரம் கிரிகைகளில் கலந்து கொண்டோருக்கும், எமது தெய்வத்தினை இறுதிவரை வைத்தியசாலையில் உயிரை காப்பதற்காக மிகவும் அக்கறையுடன் செயற்பட்ட வைத்திய அதிகாரி, வைத்திய தாதிகள், வைத்தியசாலை பணியாளர்கள் , பற்பல உதவிகள் புரிந்தோர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் பல கோடி நவில்கின்றோம். இரங்கல் உரை நிகழ்த்தியவர்களுக்கும் மலர் வளையம், மலர் மாலை செய்து உதவியவர்களுக்கும், வீடியோ, புகைப்படம், மேளம் செய்து உதவியவர்களுக்கும், இந்த கல்வெட்டை சிறந்த முறையில் அச்சிட்டு தந்த அச்சகத்திற்கும் இன்னும் பல வழிகளில் துணைநின்ற அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**மனைவி, பிள்ளைகள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வம்சாவழி




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்,
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமும் ஆகும்.

– பகவான் கிருஷ்ணர்

தமிழ் அச்சகம். 01 42 09 60 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org